DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case No. Crl.M.P.NO.1786/2024**

**prosecution witness: PW-2**

| | | |
|---|---|---|
| Name | : | Caste |
| Fathers Name | : | calling |
| Village | : | Religion |
| Taluk | : | Age |

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | சரவணன் | ஜாதி | : |
| க/பெ. | : | | தொழில் | : |
| கிராமம் | : | | சமயம் | : |
| தாலுகா | : | | வயது | : |

<u>15.10.2024</u>

<u>முதல் விசாரணை:-</u>

நான் இராமேஸ்வரம் முத்துராமலிங்கதேவர் நகரில் குடியிருந்து வருகிறேன். இராமேஸ்வரத்தில் 40 வருடங்களாக வாழ்ந்து வருகிறேன். இராமேஸ்வரம் டவுன் சர்வே எண்.627/682-1 ல் கண்ட 205 சதுர மீட்டர் நிலமும், அதில் உள்ள வீடும் முன்பு சமையாண்டி மனைவி நம்பு பெயரில் இருந்தது. நம்புவிடம் இருந்து நான்தான் முதலில் கிரையம் வாங்கினேன். நான் கிரையம் வாங்கி கிரையம் கொடுக்கும்வரை அந்த சொத்தை நான்தான் அனுபவம் செய்து வந்தேன். நான் அந்த சொத்தை நாகேந்திரனுக்கும், ஹரிஹரனுக்கும் கிரையம் கொடுத்தேன். அதற்குபின்பு அந்த சொத்தை நாகேந்திரன் அனுபவம் செய்து வந்தார். அந்த சொத்திற்கு முதலில் நம்பு பெயரில் பட்டா ஏற்பட்டு, பின்பு நாகேந்திரன் பெயரில் பட்டா ஏற்பட்டது. அந்த சொத்திற்கு நாகேந்திரன் பெயரில் சொத்துவரி, வீட்டுவரி ரசீது, தண்ணீர் வரி, மின்கட்டணம் ஏற்பட்டது. நாகேந்திரன் சொத்தை பொறுத்து இராமநாதன் அய்யர் பெயரில் மோசடியாக பட்டா மாற்றப்பட்டது. அது சம்பந்தமாக எந்த அலுவலகத்திலும் மனு கொடுத்துள்ளார்களா என்றால் தாலுகா அலுவலரிடம் கேட்டோம் அவர்கள் நாங்கள் மாற்றவில்லை என்று கூறினார்கள். சொத்திற்கு மனு கொடுக்காமல் வி.ஏ.ஓ பட்டா மாற்றம் செய்துள்ளார். அதனால் நாகேந்திரன் வழக்கு கொடுத்தார். காவல்துறை நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. இராமநாதன் அய்யர் பெயருக்கு பட்டா நடவடிக்கை அடிப்படையில் பட்டா எதுவும் மாறவில்லை. வருவாய் ஆவணங்களை வி.ஏ.ஓ திருத்தி இராமநாதன் அய்யர் பெயருக்கு பட்டா மாற்றம் செய்துள்ளார். அந்த சொத்து சம்பந்தமாக எனக்கு முழுமையாக தெரியும். இராமேஸ்வரம் கிராம நிர்வாக

அலுவலருக்கு  பட்டா கொடுப்பதற்கு அதிகாரம் இல்லை. அவ்வாறு கொடுத்திருந்தால் அது தவறு.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2024.10.15 15:28:34 +0530